**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 454/2025**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனலட்சுமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முருகேசன் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | குளத்தூர் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 02.07.2026.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது குளத்தூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு, நான் ஊத்துமலை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 24.04.2020ம் தேதி, 15.00 மணிக்கு நானும், ஊத்துமலை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் பாக்கியராஜ், தலைமைக்காவலர் இமானுவேல் தேசிங்குராஜா, 2ம் நிலைக்காவலர் சரவணன் மற்றும் காவலர் மற்றும் சுரேஷ் ஆகியோர்கள் கொரோனா தொற்று சம்மந்தமாக விதிமுறை மீறல் நடவாமல் தடுக்க ரோந்து செய்து கண்காணித்து வரும்போது தங்கம்மாள்புரம் ஊருக்கு தென்புறம் உள்ள 1வது எதிரி காளிமுத்து என்பவரது தோட்டத்தில் மாமரத்து அடியில் கண்காணிக்க பின்னால் விசாரித்து தெரிந்த தெற்கு பனவடலிசத்திரத்தை சேர்ந்த ராமையாத்தேவர் மகன் காளிமுத்து மற்றும் அதே ஊரை சேர்ந்த மாரிமுத்து என்பவரது மகன் காளிமுத்து, வேலுச்சாமி தேவர் மகன் முருகன், முத்தையா தேவர் மகன்

தங்கராஜ், சண்முகையாத்தேவர்மகன் தங்கமுத்து, மற்றும் வெள்ளத்துரை மகன் பாண்டியராஜ் ஆகிய ஆஜர் எதிரிகள் சாராயம் வடிக்க லாயக்கான உபகரணம் வைத்து 3வது எதிரி முருகன் மற்றும் 4ம் எதிரி தங்கராஜ் ஆகிய இருவரும் மேல் பானையில் தண்ணீர் மாற்றிக்கொண்டும், 5ம் எதிரி தங்கமுத்து என்பவர் தீயை தள்ளிக்கொண்டும், 6ம் எதிரி பாண்டியராஜ் என்பவர் டியூப் வழியாக வடிந்த சாராயத்தை பிளாஸ்டிக் கேனில் பிடித்துக்கொண்டும் இருந்தவர்கள் போலீசு பார்டியாகிய எங்களை கண்டதும் ஓடி எழுந்தவர்களை போலீசு பார்டி மடக்கி பிடித்து சம்பவயிடத்தை வந்து பார்வையிட சுமார் 35 லிட்டர் பிடிக்ககூடிய 3 வெள்ளை நிற கேன்களில் சாராயம் நெடியுடன் கூடிய சாராயமும்,அதில் ஊமத்தங்காய் விதையும் மிதந்து கொண்டிருந்தது. மேற்படி எதிரிகளிடம் சாராயம் பற்றி விசாரிக்க அதிக போதைக்காக நச்சு தன்மைக்கொண்ட ஊமத்தங்காயை இடித்து போட்டிருப்பதாக தெரிவித்தார்கள். பின்பு மேற்படி கேன்களில் இருந்து தலா 750 மிலி லிட்டர் பிடிக்க கூடிய வெள்ளை நிற பாட்டிலில் தலா 500 மிலி மாதிரிக்கு எடுத்தும் கொதி உலையில் இருந்து இரு வெள்ளை நிற பாட்டிலில் தலா 500 மிலி மாதிரிக்கு எடுத்தும் சாராயம் வடிக்க பயன்படுத்திய மண்பானைகள் மற்றும் மீதமுள்ள சாராயத்துடன் கூடிய கேன்களை கொண்டு செல்ல போதிய வசதி இல்லாததால் அதே இடத்தில் கொட்டி அழித்து அழிமதி செய்தும், பின்பு மேற்படி பாட்டில்களை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியும், மேற்படி சம்பவயிடத்தையும் தனிநபர்கள் யாரும் இல்லாததால் போலீஸ் பார்டியாகிய நாங்களே கையொப்பம் செய்து கைப்பற்றி எதிரிகள் மற்றும் சொத்துகள் சகிதம் நிலையம் கொண்டு வருவதற்கு அத்தாட்சி பிறப்பித்தேன். பின்னர் 17.45 மணிக்கு நிலையம் வந்து மேற்படி எதிரிகள் மீது நிலைய குற்ற எண். 180/2020, சட்டப்பிரிவுகள் 4(1) (b), 4(1A), 4(1)(aaa) TNP Act-ன் படி வழக்கு

பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல்தகவல்அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். சாட்சிகள் சிறப்பு உதவி ஆய்வாளர் பாக்கியராஜ், தலைமைக்காவலர் இமானுவேல் தேசிங்குராஜா, 2ம் நிலைக்காவலர் சரவணன் மற்றும் காவலர் மற்றும் சுரேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அதன் பின்பு எதிரிகளை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.3** ஆகும்.

வழக்கு சொத்துக்களை பகுப்பாய்வு செய்ய வேண்டி கனம் ஆலங்குளம் நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்து, ஆலங்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்ற தலைமை எழுத்தர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வக அலுவலர் கிருஷ்ணவேணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து தடயஅறிவியல் ஆய்வக அறிக்கை பெற்றேன். அந்த ஆய்வக அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும். 3 வெள்ளை நிற பாட்டில்கள் – அ.சா'பொ.1 வரிசை ஆகும். 2 வெள்ளை நிற பாட்டில்கள் – அ.சா'பொ.2 வரிசை ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கின் புகார்தாரர் நான் தான் என்றால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி நான் தான் என்றால் சரிதான். வழக்குஆவணங்களின் படி எந்த கொல்கலன்களில் ஊறல் போடப்பட்டிருந்தது என்று துலங்காது என்றால் சரிதான். வழக்கில்

எவ்வளவு சாராயம் கைப்பற்றினோம் என்றும், எவ்வளவு சாராயத்தை அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்தோம் என்றும் தனித்தனியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் என்னை தவிர வேறு மதுவிலக்கு அதிகாரிகள் யாரும் கிடையாது என்றால் சரிதான். பகுப்பாய்வு அறிக்கையில் பிரிவு 2ல் 3வது காளத்தில் ஆல்கஹால் சதவிகதம் 17.7 அளவு என்றும், உள்ளடங்கிய நீரின் சதவிகித அளவு 82.3 என்று தான் உள்ளது என்றாலும், இந்நிலையில் அதில் அட்ரோபின் இல்லை என்றாலும் சரியல்ல. நான் பகுப்பாய்வு அறிக்கையினை பரிசீலனை செய்யாமல் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பகுப்பாய்வுஅறிக்கையில் அட்ரோபின் இருந்ததாக துலங்காது என்றால் சரியல்ல. சம்பவ காலக்கட்டம் கொரோனா ஊரடங்கு காலக்கட்டம் என்றால் சரிதான். பொதுமக்கள் கொரோனா ஊரடங்கு காலக்கட்டத்தில் வெளியே வரக்கூடாது என்பதற்காக புள்ளியல் கணக்கிற்காக வேண்டி எதிரி இந்த வழக்கு பொய்யாக புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் சொன்ன நாள், நேரத்தில் எந்தவிதமான ரோந்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரியிடமிருந்து எந்தவிதமான பொருட்களை கைப்பற்றவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றாலும், பகுப்பாய்வு மாதிரிக்கு எதுவும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் காவல்நிலைய புள்ளி விபரக்கணக்கிற்காக படிப்பறிவில்லாத எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து, அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் நீதித்துறை நடுவர் நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Saravanakumar, Steno Typist, நீதித்துறை நடுவர் நீதிமன்றம், விளாத்திகுளம், தூத்துக்குடி மாவட்டம், என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.04 10:55:00 +0530